561

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 1, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. ''

ஒருவர் தன் வாழ்க்கையின் ஒரு நிலையில் கற்ற கல்வி, அவருக்கு எல்லா நிலையிலும் பாதுகாப்பாகவும் உதவியாகவும் அமையும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண் 201, டாக்டர் எஸ். சுந்தரராஜ், திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

201—

டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக் கழக மானியத் தொகை

*10145—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

திரு. ஆ. சுப்புரத்தினம்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு பல்கலைக் கழக மானியத் தொகை (University Grants Commission) கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1993 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே ஆந்திராவுக்கு அடுத்து, மருத்துவப் பல்கலைக்கழகம் அமைத்த பெருமை, தமிழக அரசுக்கு, தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு. மருத்துவப் பல்கலைக்கழகம், மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுகிறது. பல்கலைக்கழக மானியத் தொகை, கல்வி மானியத் தொகையிலிருந்து கிடைக்கிறது. தற்போது, தமிழ் பல்கலைக்கழகம், கால்நடைப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களுக்கு மானியத் தொகை கிடைத்து வருகிறது. மத்திய அரசிடமிருந்து கல்வி முன்னேற்றத்திற்காக செலவு செய்கின்ற அந்தப் பல்கலைக்கழக மானியத் தொகை இதுவரை மருத்துவப் பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்கவில்லை. கட்டிடங்கள், நூலகங்கள், கருவிகள், ஆராய்ச்சி நிலையங்கள் போன்றவற்றின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு மூலதனம் அதிகமாக இருந்தால்தான், அந்தப் பல்கலைக்கழக மானியத் தொகை கிடைக்கும். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாயை கட்டிட வளாகத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். நவீன நூலகம், மருத்துவத் துறைக்கு அமைப்பதற்காக ரூ. 60 இலட்சம் அனுமதி அளித்துள்ளார்கள். இந்த நிலையில், இந்த ஆண்டாவது பல்கலைக்கழக மானியத் தொகை, மருத்துவப் பல்கலைக்கழகத்திற்குக் கிடைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி பெற்றுத்தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். பெறுவதுதான் கடினமாக இருக்கிறது. ஆனால் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற தகவல் வருகிற 7 ஆம் தேதி, நம்முடைய யூனிவர்சிடியை ஆய்வு செய்வதற்காக வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, அவர்கள் வந்து சென்ற பிறகு சாதகமான பதில் கிடைக்குமென்று நாங்கள் நம்புகிறோம்; அவர்கள் வந்து சென்ற பிறகுதான் அதை உறுதியாகச் சொல்ல முடியும்.

1993 ஏப்ரல் 1]

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமின்ஷன் இன்றைக்கு டெல்லியிலிருந்து இயங்கக்கூடிய ஒரு மத்திய அரசினுடைய ஏகாதிபத்திய அமைப்பாக இருந்து வருகிறது. இதனுடைய 'ரீஜினல் ஆபீஸை' கூட தென் மாநிலங்களில் குறிப்பாக கல்விக்கு அடித்தளமிட்ட சென்னையில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் எல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசினால் விடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய தமிழக அரசின் சார்பாக எப்போது இந்த 'கிராண்ட்ஸ் கமிஷன்' கிடைக்க வேண்டும் என்ற அளவிலான கோரிக்கை வைக்கப்பட்டது; அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் என்னென்ன; உறுதியாக அது கிடைக்க நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சீரிய முயற்சிகள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு இருக்கிற நிதிப் பிரச்சினையிலே, 'யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன்' கண்டிப்பாக பணம் ஒதுக்க வேண்டுமென்று நாம் கேட்பதிலே எவ்வளவு வலியுறுத்திக் கேட்டிருப்போம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். 1988 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து இதை வலியுறுத்திக் கொண்டே இருக்கிறோம். பலமுறை அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது பலமுறை நேரிலே சென்று பார்த்திருக்கிறார்கள். கடைசியாக நமக்குக் கிடைத்த தகவல் மனித வள மேம்பாட்டுத் துறையில், இது ஆய்வில் இருக்கிறது என்று நமக்கு பதில் கிடைத்து இருக்கிறது. அதற்குப் பின்னாலே நம்முடைய (Vic -Chancellor) நேராகச் சென்று, அதையெல்லாம் பேசிய பின்பு, 7 ஆம் தேதி அவர்கள் ஒரு ஆய்வு செய்வதற்காக இங்கே வருவதாக ஒப்புதல் தந்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதுகுறித்து தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 7 ஆம் தேதி அவர்கள் வந்து சென்றபிறகு,—7 ஆம் தேதிதான் வருகிறார்கள்— வந்து சென்ற பின்பு, மீண்டும் நேரடியாகச் சென்று அவர்களைச் சந்தித்து, அதற்கான நடவடிக்கைளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு என்று கல்லூரியும் மருத்துவமனையும் தேவை என்று அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், தற்போது பரிந்துரை வந்தது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியை அதோடு இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இப்போது அந்த உத்தரவும் வழங்கப்பட்டிருக் கிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிங்' ஆராய்ச்சி நிலையம் மற்றும் தரமணியில் உள்ள (Basic Medical Sciences Degree Courses) ஐ எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு மாற்ற அரசுக்குப் புரிந் துரைகள் வந்துள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வி. யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் மானியம் வழங்குவது பற்றியது மூலக் கேள்வி. எனவே இதிலே (affili tion) எந்த, எந்தக் கல்லூரிக்கு வந்திருக்கிறது அல்லது வர வில்லை என்பது வராது. டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாகடர் வெ. புருஷோத்தமன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யுனிவர்சிடி கிராண்ட்ஸ்' கமிஷன் என்பது யுனிவர்சிடிக்கு ஆண்டுதோறும் மானியம் ஒதுக்குகின்ற ஒரு கமிஷன். அப்படியிருக்கும்போது டாக்டர் எம். ஜி. ஆர். மருத்து வப் பல்கலைக் கழகம் எந்தவிதத்தில் அதற்குத் தகுதி இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்த கிராண்ட்ஸ் கமிஷனிலிருந்து நிதி பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற யுனிவர்சிடி எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு மனுச் செய்து, அவர்கள் முதலிலே தங்களுடைய லிஸ்டிலே ஏற்றுக் கொள்வதற்கே காலதாமதம் செய்கிறார்கள். இப்பொழுது அவர்களுடைய லிஸ்டிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டியலிலே நம்முடைய யுனிவர்சிடியையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிராண்ட்ஸ் கொடுப்பதைப் பொறுத்தவரை ஆய்வு செய்துதான் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்ற பட்டியல் என் னிடத்திலே தற்போது இல்லை. அதை நான் தனியாகக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.